ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# வடக்குத் திருவீதிப் பிள்ளை வாழி திருநாமம்

ஆனி தனில் சோதி நன்னாள் அவதரித்தான் வாழியே
ஆழ்வார்கள் கலைப் பொருளை ஆய்ந்துரைப்போன் வாழியே
தானுகந்த நம்பிள்ளை தாள் தொழுவோன் வாழியே
சடகோபன் தமிழ்க்கு ஈடு சாற்றினான் வாழியே
நானிலத்தில் பாடியத்தை நடத்தினான் வாழியே
நல்ல உலகாரியனை நமக்களித்தான் வாழியே
ஈனமற எமையாளும் இறைவனார் வாழியே
எங்கள் வடவீதிப் பிள்ளை இணையடிகள் வாழியே

**வடக்குத் திருவீதிப் பிள்ளை திருவடிகளே சரணம்**